தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 146/ந/2026, நாள் 07.10.2026

அ. முகம்மது இனாயத்துல்லா,
செங்கோட்டை தாலுக்கா, தென்காசி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கன்னியாகுமரி நகராட்சி, கன்னியாகுமரி மாவட்டம். – எதிர்மனுதாரர்

தென்காசி மாவட்டம், செங்கோட்டை தாலுக்கா, வாவா நகரம், மதினா நகர், மேலத் தெரு, எண். 1/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. அ. முகம்மது இனாயத்துல்லா என்பவரது 10.06.2026 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.06.2026 அன்று பெறப்பட்டு, 146/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

தென்காசி மாவட்டம், செங்கோட்டை தாலுக்கா, வாவா நகரம், மதினா நகர், மேலத் தெரு, எண். 1/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. அ. முகம்மது இனாயத்துல்லா என்பவரின் 10.06.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"கன்னியாகுமரி நகராட்சியில் 10 லட்சத்திற்கு மேல் ரூ.15.00 லட்சத்திற்கு பழுது பணிகள் மற்றும் ரூ.15.00 லட்சத்திற்கு பொருட்கள் வினியோகம் செய்தல் பணிகளுக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023–ன்படியும், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 2012–ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோராதது, தனக்கு அதிகம் கமிஷன் கொடுக்கும் நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோராமல், முறைகேடாக வேலை உத்தரவு வழங்கி, காசோலை வழங்கி கமிஷன் பெற்றது.".

2. மனுதாரரின் புகார் மனுமீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.06.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் கன்னியாகுமரி நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. எதிர்மனுதாரரான கன்னியாகுமரி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.1232/2026/அ2, நாள் 01.07.2026–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில் –

"கன்னியாகுமரி நகராட்சி மூலம் நடைபெறும் ரூ.10 லட்சத்திற்கு மேல் உள்ள பணிகளுக்கு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின்படி https://tntenders.gov.in/ இணையதள முகவரி மூலம் டெண்டர் கோரப்பட்டு வருகிறது. மேலும், ஒப்பந்தப்புள்ளிகள் மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் செய்தித்தாளில் பிரசுரம் செய்யப்படுகிறது. மேலும், மனுதாரர் முறைகேடு நடைபெற்றதாக தெரிவித்துள்ள வேலையின் விபரம் எதுவும் புகார் மனுவில்

குறிப்பிடப்படவில்லை. மனுதாரர் தெரிவித்தது போல் எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். " என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கன்னியாகுமரி நகராட்சி ஆணையர் ஆகியோரை 04.08.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 07.07.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 04.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை. அவரிடமிருந்து எந்த தகவலும் பெறப்படவில்லை.

6. எதிர்மனுதாரரான கன்னியாகுமரி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.1232/2026/அ2, நாள் 31.07.2026–ல் 04.08.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு நகராட்சி மேலாளர் (பொ) திரு. முகம்மது யூசுப் என்பவரை அனுமதிக்கும்படி கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து 04.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நகராட்சி மேலாளர் (பொ) திரு. முகம்மது யூசுப் என்பவர் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"கன்னியாகுமரி நகராட்சியின் மூலம் நடைபெறும் ரூ.10 லட்சத்திற்கு மேல் உள்ள பணிகளுக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல், நெறிமுறைகளின்படியும், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின்படியும், https://tntenders.gov.in/ இணையதள முகவரி மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் (e–tender) கோரப்பட்டு ஒப்பந்தப்பணிகள் கன்னியாகுமரி நகராட்சியில் முறையாக அரசு விதிகளின்படி நடைபெற்று வருகிறது. மேலும் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் முன்பு நகர்மன்றத்தின் அனுமதி முறையாக பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்பு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ".

7. மனுதாரரின் புகார் மனு, எதிர்மனுதாரரான கன்னியாகுமரி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி மேலாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

கன்னியாகுமரி நகராட்சியில் பழுது பணிகள் ரூ.15.00 லட்சத்திற்கும், பொருட்கள் வினியோகம் செய்தல் பணிகள் ரூ.15.00 லட்சத்திற்கும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 மற்றும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 2012ன் படி ஒப்பந்தப்புள்ளிகள் கோராமல் கமிஷன் வழங்கும் நிறுவனத்திற்கு நேரடியாக பணிகள் வழங்கப்படுகிறது என்பது மனுதாரரின் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி நகராட்சி மூலம் நடைபெறும் ரூ.10 லட்சத்திற்கு மேல் உள்ள பணிகளுக்கு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின்படி இணையதளம் https://tntenders.gov.in// மூலம் (e–tender) டெண்டர் கோரப்பட்டு வருகிறது என்பதும். ஒப்பந்தப்புள்ளிகள் மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் செய்தித்தாளில் பிரசுரம் செய்யப்படுகிறது என்பதும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் முன்பு நகர்மன்றத்தின் அனுமதி முறையாக பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதும், மனுதாரரின் மனுவில் முறைகேடு நடைபெற்றதற்கான விபரம் எதுவும் தெரிவிக்கவில்லை என்பதும், ஒப்பந்தப்பணிகள் அரசு விதிகளின்படி முறையாக நடைபெற்று வருகிறது என்பதும், ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதில் எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை என்பதும் கன்னியாகுமரி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி மேலாளரின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில்,

1) மனுதாரர் கன்னியாகுமரி நகராட்சிமூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்து பொத்தம் பொதுவான புகார் அளித்துவிட்டு, விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்துள்ள மனுதாரரின் செயல் மிகவும் கண்டிக்கதக்கதாகும், என்பதால், எதிர்வரும்

காலங்களில் இதுபோன்ற செயல்களை தவிர்த்திட மனுதாரரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2) கன்னியாகுமரி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி மேலாளரின் வாக்குமூலத்தில் கன்னியாகுமரி நகராட்சி மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் நகர்மன்றத்தின் அனுமதியுடன், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின்படி இணையதளம் மூலம் (e-tender) டெண்டர் கோரப்பட்டு, மாவட்ட செய்தித்தாளில் பிரசுரம் செய்யப்பட்டு, முறையாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள நிலையில், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 மற்றும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 2012-ன்படி ரூ.10 லட்சத்திற்கு மேலான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்பதை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி மூலம் ஆய்வு மேற்கொண்டு உரிய அறிக்கையினை 3 மாதங்களுக்குள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 07-ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. அ. முகம்மது இனாயத்துல்லா,
   எண்.1/1, மேலத் தெரு,மதினா நகர், வாவா நகரம்,
   செங்கோட்டை தாலுக்கா- 627812,
   தென்காசி மாவட்டம்.
2. நகராட்சி ஆணையர்,
   கன்னியாகுமரி நகராட்சி,
   கன்னியாகுமரி மாவட்டம்.
3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   திருநெல்வேலி.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.
5. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உ திரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

13/10/26
செயலாளர்.